செய்கிறார்கள். மாத்திரைகள் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக இந்தத் துறை இல்லை. இருந்தாலும் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, மீன் எண்ணெய் உடம்புக்கு நல்லது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அது சைவ உணவைச் சேர்ந்ததா அல்லது அசைவ சைவர்கள் சேர்ந்ததா ? ஏனென்றால் கல்கத்தாவிலே உயர்ந்த சைவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் அதை வெஜிடேரியன் வகையரு என்றுதான் சொல்கிறார்கள், மீன்கறி என்றுதான் சொல்லுகிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் விளக்கமாகக் கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மீனைச் சாப்பிடும்போது அசைவம், அதை மாத்திரையாகச் சாப்பிடும் போது சைவம்.

மீன் பிடிக்க இலவச உரிமம்

* 361 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாஜி ராணுவத்தினருக்கு இலவசமாக மீன் பிடிக்கும் உரிமம் வழங்க செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால், இலவச உரிமம் கேட்டு எத்தனை பேர் தற்போது விண்ணப்பித்துள்ளார்கள் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலூர் கோட்டையைச் சுற்றியுள்ள அகழி.

* 362 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கோட்டையைச் சுற்றியுள்ள அகழியைச் சீர்திருத்தி செப்பனிட்டு உல்லாசப் படகு விடவும், நீச்சல் குளம் நிறுவவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?